உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

தேவன் தீமையை அனுமதிப்பது ஏன்?

பாடம் - 10



வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் : # 10

தேவன் தீமையை அனுமதிப்பது ஏன்?

உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இன்று இந்த கேள்வி நமக்குள் மாத்திரம் இல்லாமல் அநேக மக்களின் இருதயங்களில் வேதனையோடும், கோபத்தோடும் எழும்புகிற கேள்வியாய் இருக்கிறது.

அன்றாட தொலைக்காட்சிகளிலும், நாளிதழ்களிலும், இணையதளங்களிலும் நாம் பார்க்கும் பொழுது நாம் வாழும் பூமி எவ்வளவு பயங்கரமும் பரிதாபமுமாக இருக்கிறது என்று அறிந்து கொள்ளலாம்.

ஒரு பக்கம் கடுமையான வறட்சி... வறண்ட பூமியில் குடிக்க தண்ணீரில்லாமல் பரிதாபத்திற்குரிய நிலைமை....

இன்னொரு பக்கம் கடுமையான மழை....வெள்ள பெருக்கினால் வீடு, உடைமைகளை இழந்து அவதிப் படுகிறார்கள்.

புதிதாக திருமணம் செய்து புது வாழ்வு துவங்கும் தம்பதிகள் வீடு திரும்புவதற்குள் பரிதாபமாக, பயங்கரமான **விபத்தில் சிக்கி இறக்கிறார்கள்.**

ஏன் இந்த சோகம்?

ஏன் பிறக்கிறோம், ஏன் இறக்கிறோம் என்று அறியாமல் ஏழை நாடுகளில் பச்சிளம் குழந்தைகள் **உண்ண உணவில்லாமல் பட்டினியால் இறக்கின்றனர்.**

ஏன் ?

இவர்கள் ஏன் பிறந்தார்கள் என்ற ஆச்சரியமான கேள்வி எழும்புகிறது.

மேலும், ஒன்றும் அறியாத ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்க் கொல்லி நோய்களான எய்ட்ஸ், சார்ஸ், புற்று நோய், அம்மை என பலவிதமான **நோய்களின் தாக்குதல்களினால் துன்புறுகிறார்கள்.**

ஏன் ?

பிறக்கும்போதே, அங்க குறைபாடுகளோடும், மனவளர்ச்சி குன்றியும் பிறக்கும் பிறப்பு எவ்வளவு கொடுமையானது.

வாழ்நாள் முழுவதும் இந்த குறைபாடுகளோடு வாழ்கிறார்களே !

ஏன்
இந்த கொடுமை ?

எங்கு பார்த்தாலும் **கொலை, கொள்ளை, கற்பழிப்பு** என தீமை செய்பவர்கள் எந்தவித அச்சமுமின்றி தொடர்ந்து செய்தாலும் நியாயம் தீர்க்கப்படாமல் இருக்கிறார்களே....

ஏன் ?

மனித ஆதிக்கத்தாலும், யுத்தங்களாலும் உடைமைகளை இழந்து சொந்த வீட்டில்; சொந்த நாட்டில் வசிக்க முடியாமல் **அகதிகளாய் திரிகிறார்களே...**

ஏன் ?



மேலும், **பகிரங்கமான அநீதிகளும், மோசம் போக்குதலும், அந்நியர்களை துன்புறுத்தும் அராஜகமும், நலிந்த மக்கள் மேல் அதிகாரமும்** செலுத்தப்படுகிறது.

ஆனாலும் தீமை செய்பவர்களுக்கு எந்த தீங்கும் அணுகுவதில்லை....

ஏன் ?

இது மாத்திரம் அல்ல **இயற்கையின் சீற்றங்களான சுனாமி, புயல், பூமி அதிர்ச்சிகள்** ஆகியவற்றால் ஆயிரக்கணக்கான மக்கள் துன்பத்திலும் வேதனைகளிலும் அகப்பட்டு இயற்கையின் கொடூரத்தை தாங்க முடியாதவர்களாக இறக்கிறார்கள்....

ஏன் ?

ஓ! எத்தனை இருதயங்களில் இந்த அழுகையின் கூக்குரல்... இதற்கான பதில்தான் என்ன?

இவைகளை தேவன் கவனிக்க மாட்டாரா?

இத்துன்பங்கள் அனைத்தையும் அவரால் தடுக்க முடியாதா?

அவருடைய அமைதலுக்கான காரணம் என்ன?

இது இலட்சக்கணக்கான மக்களின் இருதயங்களில் தோன்றக்கூடிய முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

உண்மையில், அநேக நல்ல மனிதர்கள் திருப்தியான பதிலையும், விளக்கத்தையும் கண்டுபிடிக்க இயலாதவர்களாக, கடவுள் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். ஏனென்றால், கடவுள் ஒருவர் இருந்தால்,

இந்த சூழ்நிலைகளை மாற்ற ஏதாகிலும் செய்யாதிருப்பாரா?

இவ்வளவு வேதனைகளையும், உபத்திரவங்களையும், துன்பங்களையும் கண்டு இரக்கம் அற்றவராக இருப்பாரா?

பின் இவைகளுக்கு பதில் தான் என்ன?

இது தற்காலத்தில் மட்டும் கேட்கப்படும் கேள்வி அல்ல, பூர்வக்காலமுதல் கேட்கப்பட்ட கேள்வியாக உள்ளது.

தேவனுடைய மனிதர்களும், தீர்க்கதரிசிகளும் கூட இந்த கேள்விக்கான விடையைத் தேடினார்கள். இதைக் குறித்து ஞானியும், அரசனுமான சாலொமோனின் வார்த்தைகளை கேட்போம்.

பிரசங்கி 8:16,17

"நான் ஞானத்தை அறியவும், மனுஷன் இரவும் பகலும் கண்ணுறக்கமில்லாமல் பூமியிலே செய்யும் வேலைகளைப் பார்க்கவும் என் மனதைச் செலுத்தினபோது, தேவன் செய்யும் சகல கிரியைகளையும் நான் கவனித்துப்பார்த்து, சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியையை மனுஷன் கண்டுபிடிக்கக் கூடாதென்று கண்டேன். அதை அறியும்படி மனுஷன் பிரயாசப்பட்டாலும் அறியமாட்டான்; அதை அறியலாம் என்று ஞானி எண்ணினாலும் அவனும் அதை அறிந்துகொள்ளமாட்டான்."

பார்த்தீர்களா! இந்த ஞானமுள்ள மனிதன் கூட இந்த முடிவுக்கு வந்துவிட்டார்.
பொறுமைசாலியான யோபு இதை பற்றி கூறும்போது,

யோபு 10:3

"நீர் என்னை ஒடுக்கி, உம்முடைய கைகளின் கிரியையை வெறுத்து, துன்மார்க்கரின் யோசனையைக் கிருபையாய்ப் பார்க்கிறது உமக்கு நன்றாயிருக்குமோ?"

இதை குறித்து ஆபகூக் தீர்க்கதரிசி கூறுகையில்,

ஆபகூக் 1:2

"கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். நீர் கேளாமலிருக்கிறீரே! கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீரே!"

மேலும், சங்கீதக்காரனாகிய தாவீதின் வார்த்தையை கவனிக்கும்போது,

சங்கீதம் 44:23

"ஆண்டவரே, விழித்துக்கொள்ளும்; ஏன் நித்திரை பண்ணுகிறீர்? எழுந்தருளும், எங்களை என்றைக்கும் தள்ளிவிடாதிரும்."

தேவன் கண் உறங்காதவர் (சங்கீதம் 121:3) என்று வசனத்தில் எழுதியிருந்தாலும், மேலே கூறிய வசனத்தில் தாவீது தேவன் உறங்கி கொண்டு இருப்பதாக குற்றம் சாட்டுகிறார்.

ஆம், அவர்கள் தேடினார்கள்; பதிலை கண்டு பிடிக்க முடியவில்லை.

...அவர்கள் கேள்விக்குள்ளானார்கள்!!

தேவன் நீதியும், பரிசுத்தமும், நல்லவராகவும், எந்தவித தீமைகளையும் வெறுக்கக்கூடியவர் என்று வேதத்தின் மூலமாக அறிந்திருந்தபடியால் அவர்கள் கேள்விக்குள்ளானார்கள். இதைக் குறித்து வாசிக்கையில்,

சங்கீதம் 5 : 4

“நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல; தீமை உம்மிடத்தில் சேர்வதில்லை.”

அதுவும் அல்லாமல், தேவன் **சர்வ வல்லமையுள்ளவரும், சகல பராக்கிரமம் நிறைந்தவரும், ஒருவரும் அவருடைய சித்தத்தை எதிர்க்கக்கூடாதவருமாக இருக்கிறவர்** என்றும் அறிந்திருக்கிறார்கள்.

மீண்டுமாக ஏசாயாவின் புத்தகத்தில் வாசிக்கும்போது,

ஏசாயா 14:27

“சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?”

ஆகையால், இவ்வளவு அன்பும், நீதியும், சர்வ வல்லமையுமுள்ள தேவன் இவ்வளவு தீமைகளை இவ்வுலகில் ஏன் அனுமதிக்கிறார்?

நிச்சயமாக, இக்கேள்விக்கு ஒரு பதில் இருக்க வேண்டும்.

ஆனால், தேவனுடைய பரிசுத்த மனிதர்களும் தீர்க்கதரிசிகளும் இதற்கான விடையை கண்டுபிடிக்கவில்லை என்று அநேக வசனங்களை வாசித்து அறிந்தோம்.

இதற்கான விடையை இன்று நாம் கண்டுபிடிக்க இயலும் என்று நினைக்கிறீர்களா?

அப்படியானால் இதற்கான பதில் யாரிடம் உள்ளது?

ஆம்! தேவனிடம் உள்ளது! அவருடைய வார்த்தைகளை கேட்போம்,

எரேமியா 33:3

“என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.”

கற்பனை செய்து பாருங்கள், வல்லமையுள்ளவரும், சர்வத்தையும் சிருஷ்டித்தவருமாகிய தேவன், அவரிடம் நாம் கேள்விகளை கேட்பதற்கு அழைக்கிறார். நம்புவதற்கு கடினமாக உள்ளதா?

இதைக்குறித்து ஏசாயாவின் புத்தகத்தில் வாசிக்கும்போது,

ஏசாயா 1 : 18



“வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்;..”

ஆம், தேவன் தாமே கேள்விகளை கேட்கும்படி அழைக்கிறார்.

ஆனால், பரிதாபம் என்னவெனில்..... மிக சிலரே கேள்விகளை கேட்க முன் வருகிறார்கள்.

இந்த காரியத்தை குறித்து தீர்க்கமாக நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் நிரூபிக்கிறது,

மத்தேயு 7:7

“கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.”

ஆம், இயேசு கேட்கவும், தேடவும் தட்டவும் அழைக்கிறார்.

மேலும் நாம் 8-ம் வசனத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை கவனிக்க வேண்டும்.

“ஏனென்றால், கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.”

ஆம், இந்த வசனத்தில் “அனைவரும்” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இது தேவனிடமிருந்து பெற்ற மிகச்சிறந்த, அற்புதமான வாக்குத்தத்தமாக இருக்கிறது!

ஆனால் இயேசுவின் இந்த வார்த்தைகள் மிக சிலருக்கே புரிந்தது.

கேட்பதும், தேடுவதும் உலக நன்மைகளுக்கென்றே அநேகர் நினைத்துக்கொண்டு, வேலை, வீடு, வண்டி, மணமக்கள், கடன்... போன்றவற்றை கேட்கிறார்கள்.

...ஆனால் இயேசு இதைக் குறித்து பேசவில்லை?

மேலும், உலகத்தின் தேவைகளைக் குறித்து இயேசு சொன்ன போதனைகளை வாசிப்போம்.

மத்தேயு 6:8

“அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.”

ஆம், நம்முடைய பரலோக தந்தை நம்முடைய தேவைகளை அறிந்திருக்கிறார். பூமிக்குரிய பெற்றோர்கள், அவர்களுடைய பிள்ளைகள் எதையும் கேட்காமலேயே பிள்ளைகளின் தேவைகளை திட்டமிட்டு பூர்த்தி செய்கையில், நம்முடைய பிதா நம்முடைய தேவைகளை சந்திப்பது எவ்வளவு நிச்சயம்.

ஆகவே, இந்த வாக்குறுதிகள் பூமிக்குரியவைகள் அல்ல.

இது ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்கும், ஞானம் மற்றும் புரிந்துகொள்ளுதற்கான ஆவிக்குரிய வாக்குத்தத்தமாகும்.

தேவனிடத்தில் விடையை பெற்றுக் கொள்ள செல்வதற்கு முன்பு நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும்.

அது, நாம் ஞானிகள் என்பதினால் விடையை பெறுவோம் என்று நம்புவது அல்ல, மாறாக கடைசி காலத்தில் இருப்பதினாலேயே விடையை பெறுவோம் என்று நம்புகிறோம்.

நாம் இந்தக் கேள்வியை தேவனிடத்தில் எடுத்துச் செல்லும் போது, அவர் நமக்கு பதில் அளித்து நம்மை அறியாமையிலிருந்து அகற்றி அறிவூட்டுகிறார்.

தேவன் நம்மிடம் எப்படி பேசி பதில் அளிப்பார்?

தேவன் அவருடைய வார்த்தைகள் மூலமாக நம்மிடம் பேசுகிறார்.

ஏசாயா 34:16

“கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்.”

ஆம், தேவனுடைய வார்த்தைகளை தேடுபவர்கள் நிச்சயமாக கண்டடைவார்கள் என்ற வாக்குறுதியை நமக்குத் தருகிறார். எனவே கேள்விக்கான பதிலை வசனங்கள் மூலமாக ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இன்றைய பாடத்தில் உள்ள கேள்விக்கான பதிலை, கீழ்வரும் முக்கியமான வசனத்தில் காண்கிறோம்.

பிரசங்கி 1:13

“....மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்கு தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்.”

மீண்டுமாக அதே காரியத்தை குறித்து வாசிப்போம்.

பிரசங்கி 3 : 10

"மனுபுத்திரர் பாடுபடும்படி தேவன் அவர்களுக்கு நியமித்த தொல்லையைக் கண்டேன்."



இதன் பொருள் என்ன ?

"கடுந்தொல்லை" என்றால் என்ன ?

இது, இன்றைக்கு இருக்கக்கூடிய உலகத்தின் நிலைமைகளாகிய – துக்கம், வேதனைகள், அநியாயங்கள், ஏமாற்றுவது, கொலைகள், இயற்கையின் சீற்றங்கள், பசி, வியாதி, மரணம் இவைகளை குறிப்பதாகும்.

இவைகள் "கடுந்தொல்லைகள்" – தான்.

இக்கடுந்தொல்லைகளில் நாம் "பாடுபடும்படி" தேவன் அனுமதிக்கிறாரா ?

அப்படியென்றால், இதை எவ்வாறு புரிந்து கொள்வது ?

ஒருவேளை, உடற்பயிற்சிகள் மனிதனுடைய சரீரத்திற்கு நன்மை தருவது போல, தீமையான அனுபவங்கள் மனிதனுக்கு நன்மையை வருவிக்குமா ?

ஆம், இந்த தீமையான அனுபவங்களும், வேதனையான சூழ்நிலையின் மூலமாக மனுக்குலமானது,

ஏதோ ஒரு வகையில் நன்மையை அடையப் போகிறார்கள்.

"பாடுபடுவதின்" மூலம் நாம் கற்றுக்கொள்கிற பாடங்கள் அநேகமாயிருகிறது.

இதன் மூலம் தேவன் தீமையை அனுமதித்ததற்கு ஒரு திட்டமும், நோக்கமும் இருப்பதை உணர்கிறோம் !

இதைத்தான் தேவன் ஏசாயாவின் புத்தகத்தில் நமக்கு எடுத்துக்காட்டுகிறார்.

ஏசாயா 66 : 1

"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி..."

இதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா ?

இங்கு தேவன் ஒரு சிறப்புமிக்க வாக்கியத்தைக் கூறுகிறார்.

இங்கு "பாதபடி" என்பது எதை குறிக்கிறது ?

இது பொதுவாக, அரசர்கள் அமரும்போது அவர்களுடைய பாதங்களை வைப்பதற்கு மெதுவான பஞ்சினாலும், துணிகளாலும் அலங்கரித்து அவர்களுக்கு முன்பாக வைக்கப்படும், ஒரு சிறிய "முக்காலி" போன்ற ஆசனத்தை குறிக்கும். இதற்கு மூன்று (அ) நான்கு கால்கள் இருக்கும்.

இதை பற்றி (ஏசாயா 66 – 1) ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது ?

தேவன் பரலோகத்தில் அமரும்பொது பூமியின் மேல் அவர் பாதத்தை வைக்கிறாரா ?

நிச்சயமாக, இவ்வசனத்தின் பொருள் இது அல்ல.

"பாதப்படி" என்பதற்கு மற்றுமொரு பொருள் உள்ளது.

அப்போஸ்தலர் 22 : 3

"...இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து..."

இங்கு அப்போஸ்தலராகிய பவுல் கமாலியேலின் “பாதபடியில்” அமர்ந்து கற்றுக்கொள்ளுவதைப் பற்றி பேசுகிறார்.

இவர் ஒரு நியாயசாஸ்திரி, நியாயப்பிரமாணத்தை கற்றுக்கொடுப்பவர் (அப்போஸ்தலர் 5:34).

ஆகவே, **“பாதப்படியில் அமருவது”** அல்லது **“பாதத்தருகே உள்ள இடம்”** என்றால் ....**”கற்றுக்கொள்ள கூடிய நிலைமையை”** காட்டுகிறது.

இந்தியாவில் இது ஒரு புதிய காரியம் அல்ல, ஆதி காலத்திலிருந்து மாணவர்கள் அவர்களுடைய ஆசிரியரின் பாதப்படியில் அமர்ந்து கற்றுக்கொள்ளுவது வழக்கம் ------ இதை “குரு – சிஷ்ய” பாரம்பரியம் என்றழைப்பார்.

ஆகவே பூமியை “பாதபடி” (அல்லது) “கற்றுக் கொள்ளக்கூடிய இடம்” என்று தேவன் சொல்கிறார். ஆம் ! கற்றுக்கொள்வதற்கான மாபெறும் பள்ளிக்கூடம் !!

ஒரு பள்ளியில் அநேக வயதுள்ள பிள்ளைகள் வெவ்வேறு வகுப்பில் படிப்பது போல சிறுவர்கள், பிள்ளைகள், வாலிபர்கள், வயது சென்றவர்களாகிய அனைவரும் இந்த மாபெரும் பள்ளியின் வெவ்வேறு வகுப்புகளில் உள்ளவர்களாவர்.

சிலர் கேட்கலாம் – “இப்படிப்பட்ட வேதனை நிறைந்த வழிமுறையின் மூலம் ஒருவர் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் என்ன ?” என்று.

மாறாக, தேவன் மனிதனை தீமை செய்யாதபடிக்கு அல்லது

முற்றிலுமாக தீமைகளை புறக்கணிக்கும் நிலையில் அவனை படைத்திருக்கலாமே ? என்றும் சிலர் கேள்வி எழுப்பலாம்.

தேவன் இதை மிகவும் எளிதாக நடத்தியிருக்கலாம்....



அவ்வாறு படைத்திருந்தால் மனிதன் ஒரு உயிருள்ள இயந்திரமாக இருந்திருப்பான்.

ஆனால் மனிதனை பொருத்த வரைக்கும் தேவனுடைய நோக்கம் அதுவல்ல.

தன்னால் சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதற்காக மனிதன் எதையும் அறியாத, குருட்டுத்தனமாக கீழ்ப்படிதலை காண்பிப்பதை தேவன் விரும்பவில்லை.

மனிதனுக்கான தேவனுடைய திட்டம் அது அல்ல.

தேவன் மனிதனை இந்த பூமிக்கு ஒரு ராஜாவாக படைத்தார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

ஆதியாகமம் 1:28

"....சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.

சங்கீதம் 8:5

"...மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்."

தேவன் பரிபூரணராக இருந்ததுபோல மனுஷனும் பாவம் இல்லாமல் பரிபூரணனாக இருந்தான்.

மனிதன் மரிப்பதற்காக அல்ல அவனுக்குள் ஜீவன் இருந்தது, அவன் ஜீவனோடு இருப்பதற்கான உரிமையையும் பெற்றிருந்தான்.

தேவனைப் போல் மனிதனும் சுயமாக சிந்தித்து செயல்படும் குணாதிசயத்தை பெற்றிருந்தான்.

எதையும், பேசவும், சிந்திக்கவும், சுயாதீனம் பெற்றிருந்தான்.

ஆம்! மனிதன் நன்மை தீமை இன்னதென்று சுயமாக பகுத்தறியும் சுயாதீனம் பெற்றிருந்தான்.

அவன் தன் சொந்த விருப்பத்தை செயல்படுத்த சுதந்திரம் பெற்றிருந்தான்.

இப்படியாக தேவன் மனிதனை உண்டாக்கினார்.

ஆனால், இந்த சுதந்திரத்தினால் ஆபத்துமிருந்தது !
ஓர் மாபெரும் ஆபத்து !!

அண்டசராசரத்தில் இரண்டே சக்திகள் (அ) வழிகள் உள்ளன.......நன்மை மற்றும் தீமை. இவ்விரண்டையும் செய்வதினால் வரும் பலன்களும் உண்டு.

நன்மையானது சந்தோஷம், சமாதானம், நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும்.

தீமையானது வேதனைகள், மரணத்திற்கு வழிநடத்தும்.

மனிதன் அவனுடைய சொந்த அறிவை பயன்படுத்தி சரியான வழியை தெரிந்துக் கொள்ளவேண்டும்.

யோபு 34 : 4

"நமக்காக நியாயமானதைத் தெரிந்துகொள்வோமாக, நன்மை இன்னதென்று நமக்குள்ளே அறிந்துகொள்வோமாக."

இப்படி தெளிவான காரியத்தை தேர்ந்து எடுப்பதற்கு இந்த இரண்டு வழிகளை குறித்த அறிவையும் அவைகளினால் வரும் பலன்களைப் பற்றியும் முதலில் நன்றாக புரிந்து இருப்பது அவசியம்.

இதற்கு அவனுக்கு காலமும் அவசியம்.

இதைத்தான் நம்முடைய தேவன் இன்றைக்கு செய்திருக்கிறார்.

அவர் மனுஷனுக்கு ஒரு தெய்வீக திட்டத்தை ஏற்படுத்தி அதில் அவன் நன்மை, தீமையின் அனுபவத்தை பெற்று கொள்ளுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை தருகிறார்.

இது ஒருவர் **"நீங்கள் எதில் பயணம் செய்ய விரும்புகிறீர்கள், ரயிலிலா (அ) விமானத்திலா ?"** என்று கேட்டது போலிருக்கும்.

ஒருவர் ரயிலிலோ, விமானத்திலோ இவ்விரண்டிலும் பயணம் செய்து

அனுபவம் பெற்றிருந்தால்தான், இந்த கேள்விக்கு தெளிவான, சரியான பதிலை கூற இயலும்.

ரயிலில் பயணம் செய்திருந்து......விமானத்தில் செல்லவில்லையென்றால்...... பதில் கூற இயலாது.

நன்மை, தீமையை புரிந்து கொள்வதில் மனுக்குலத்தின் நிலையும் அவ்வாறே இருந்தது.

ஆகவேதான், ஏதேனில் இருந்த விருட்சம் **“நன்மை தீமை அறியத்தக்க விருட்சம்”** என்று அழைக்கப்பட்டது **(ஆதியாகமம் 2:17)**. அதாவது கனியை புசித்த பின்பு கீழ்ப்படியாமை என்ற பாவம் உள்ளே நுழைந்து, நன்மை தீமையின், அனுபவங்களை பெறுவதற்கான சந்தர்ப்பம் அன்றுமுதல் மனிதனுக்கு உருவானது.

மனிதனுடைய வாழ்க்கை குறுகியதாகவும், அவன் நன்மை - தீமை அனுபவத்தை கற்றுக்கொண்டாலும், அவன் முடிவு மரணம் என்று இருப்பதினாலும் இப்படிப்பட்ட அனுபவங்களை பெறுவதினால் பிரயோஜனம் என்ன ? என்று சிலர் கேள்வி எழுப்புகிறார்கள்.

இங்கு தான், சாதாரணமாக மனுக்குலத்தில் பெரும் பகுதியினர் அறிந்திராத, தேவனுடைய தெய்வீக திட்டத்தை பற்றின, வேதத்தின் மாபெரும் சத்தியத்தை அறிந்து கொள்கிறோம்.

மரித்த (அ) மரிக்கப் போகிற மனுக்குலத்தினர் யாவரும் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பதே அந்த சத்தியமாகும் !

இது ஒரு..................நம்பமுடியாத காரியம்தான் !

இது தேவனுடைய வசனத்தில் எழுதப்படாதிருந்தால், இதை நாம் நம்புவதற்கு மிக கடினமாகத்தான் இருந்திருக்கும். சகல மனுக்குலமும் மீண்டும் ஜீவனை பெற்று வாழ்வதற்கான வாய்ப்பு கல்வாரியில் இயேசு தந்த பலியினால் பெறப்பட்டதாகும்.

1 கொரிந்தியர் 15 : 22

“ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்”

அப்படியானால், நம் இருதயத்தில் எழும் கேள்வி என்னவென்றால்,

மனிதர்களாகப் பிறந்த அனைத்து நல்லோரும் தீயோரும் உயிர் அடைவார்களா ? - என்பதே.

அப்போஸ்தலனாகிய பவுல் இதை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

அப்போஸ்தலர் 24:15

“நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறதுபோல......”

ஆம், அது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இயேசுவும் இதைக் குறித்து மிகவும் தெளிவாக சொல்லியிருக்கிறார்.

யோவான் 5 : 28

"....நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம், ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்."

ஆம் ! தேவனுடைய ராஜ்யத்தில், இயேசுவின் இரண்டாம் வருகையில் அனைவரும் உயிர்த்து எழும்புவார்கள். இந்த தீமையான ராஜ்யம் முடிவடைந்து, நீதியான ஆளுகை தொடங்கும்.

முழு உலகஜனங்களுக்கும் இரண்டாவது முறையான ஒரு வாய்ப்பு கிடைக்க போகிறதை குறித்து கற்பனை செய்து பாருங்கள்.

தவறுகளை உணர்ந்து மனம்திருந்துவதற்கும், குற்றங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பு கேட்டு சீர்ப்பொருந்துவதற்கும் ஒரு சிறந்த வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

உதாரணமாக: கொலை செய்தவர்....கொலை செய்யப்பட்டவரை..... நேரில் பார்க்கும் போது, அவர்களுடைய நினைவுகள் என்னவாயிருக்கும் ?

ஆம், அநேக குற்றவாளிகள் சிறையில் இருக்கும் பொழுது இப்படி சிந்தித்திருக்கக் கூடும்.........



"எனக்கு மட்டும் வாழ்வதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்தால்............"

"இப்போது தெரிந்திருக்கும் காரியங்கள் அப்போதே தெரிந்திருந்தால்......"

"நான் மீண்டுமாக ஒரு புதிய வாழ்க்கையை தொடங்க வாய்ப்பு கிடைத்தால் நான் அநேக காரியங்களை செய்திருப்பேனே என்று நினைக்கலாம்......"

ஆம், இதுவே அநேகருடைய விருப்பமாக இருக்கிறது. ஆகவே தேவன் அனைவருக்கும் இந்த வாய்ப்பை அளிக்கிறார். அதினாலேயே, தேவனுடைய திட்டத்தில் இரண்டு மாபெரும் காலக்கட்டங்கள் உள்ளன.

தீமையின் அனுமதிக்கான

முதலாம் மற்றும் இரண்டாம் உலகம்

(தீமையின் காலம்)

இங்கு...."ஆதாமுக்குள் எல்லோரும் மரிப்பது போல.."

நீதியை புரிந்து கொள்ளுவதற்கான (2பேதுரு 3-13)

மூன்றாம் உலகம்

(நன்மையின் காலம்)

இங்கு......."கிறிஸ்துவுக்குள் அனைவரும் உயிர் பெறுவார்கள்."



இப்படியாக அனைவருக்கும் ஜீவனுக்கான இரண்டு அனுபவங்களும், காலங்களும் இருக்கும்.

உண்மையில் ஒவ்வொருவரும் இரண்டு முறை ஜீவிப்பார்கள். இருந்தாலும் வெகு சிலரே வேதத்தின் இந்த மாபெரும் சத்தியத்தை அறிந்துள்ளனர்.

இதுவே மனுக்குலத்திற்கான தேவனுடைய திட்டமாகும். இதை குறித்து வாசிக்கையில்,

ரோமர் 8 : 20, 21

"அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது."

இதுவே தேவ திட்டத்தின் இரத்தின சுருக்கமாகும்.

இது இரண்டு நிலைகள் அல்லது ஜீவியத்தை குறித்து பேசுகிறது.

முதலாவது **"அழிவுக்குரிய அடிமைத்தனத்தின்"** நிலைமை.

இரண்டாவது **"மகிமையான சுயாதீனத்தின்"** நிலைமை.

ஆம், இதற்கான பொருளை நாம் சற்று தியானிப்போம்.

"சிருஷ்டியானது"

இது உலக மனுக்குலத்தை குறிக்கும்.

"சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது."

இது பாவம், மற்றும் மரணத்தினால் உண்டான சபிக்கப்பட்ட நிலையை குறிக்கும்.

சங்கீதம் 51:5 - "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்"

ரோமர் 5:12 - "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று."

"சுய இஷ்டத்தினாலே அல்ல"

என்பது ஒருவருக்கும் இந்த விஷயத்தில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கான வாய்ப்பு அளிக்கப்படாததை குறிக்கும். எப்படியெனில், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் நலன் கருதி, சில சமயங்களில்

அவர்கள் பிறப்பதற்கு முன்னதாகவே அவர்களுடைய நன்மைக்காக முடிவுகளை எடுப்பது போல இருக்கும். இப்படியாக எல்லா சிருஷ்டிக்கும் பிதாவானவர் **(எபேசியர் 3:14,15)** மனுக்குலத்தின் சார்பில் இந்த முடிவை எடுத்துள்ளார்.

“மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே”

இந்த தீமையை தேவன் அனுமதித்ததற்கான நோக்கம் – “ஒரு நம்பிக்கையோடே” என்று வாசிக்கிறோம்.

அந்த நம்பிக்கை என்ன ?

அது **“தீமையை அனுபவிப்பதின்”** மூலம், அதனுடைய **கசப்பான அனுபவங்களை புரிந்து கொண்டு....தீமையை வெறுத்து....நீதியின் மேலான விருப்பத்திற்கு** வழிநடத்தும் படிப்பினை மற்றும் நன்மைகளாகும்.

சிலர் கேட்கலாம், தீமையை பற்றின அறிவை பெற்று கொள்ள இதை விட எளிதான, வேதனை அற்ற வழி முறை இல்லையா ? – என்று.

இக்கேள்விக்கான விடையை அறிந்து கொள்ளுவதற்கு முதலாவது தீமையின் அறிவை பெற்று கொள்ள இருக்கும் வழி முறைகளை நாம் சற்று கவனிக்க வேண்டும்.

ஆம், தீமையின் அறிவை நாம் நான்கு வழிகளில் பெற்று கொள்ளலாம். அவை –

1. தன்னில்தானே அறிதல்

2. பார்த்து அறிதல்

3. கேட்டு அறிதல்

4. அனுபவித்து அறிதல்

இப்பொழுது இவற்றை பற்றி ஒவ்வொன்றாக தியானித்து அறிவோம்.

தன்னில்தானே அறிதல்

இது அனுபவம் மூலம் கற்று கொள்ளும் வழி முறையின்றி சகல அறிவையும் **நேரடியாக புரிந்து கொள்ளுதலாகும்.**

அதாவது, சுயமாக அனைத்து காரியங்களை பற்றி தெளிவும், முழுமையுமான அறிவை பெற்று கொள்ளுதலை குறிக்கும்.

தேவன் இந்த வழி முறையிலே அவருடைய ஞானத்தை பெற்றுள்ளார் – ஏனெனில் தீமையையும் அதின் விளைவையும் புரிந்து கொள்ள அதன் அனுபவம் தேவனுக்கு அவசியம் அல்ல.

தன்னில் தானே அறிந்து கொள்ளும் தேவனுடைய வல்லமையை பற்றி,

ஏசாயா 40 : 14

"தமக்கு அறிவை உணர்த்தவும், தம்மை நியாயவழியிலே உபதேசிக்கவும், தமக்கு ஞானத்தைக் கற்றுக்கொடுக்கவும், தமக்கு விவேகத்தின் வழியை அறிவிக்கவும், அவர் யாரோடே ஆலோசனை பண்ணினார் ?"

ஆம், தேவன் தனக்கு தானே ஆசிரியராக இருக்கிறார். இதுவே தன்னில்தானே அறிந்து கொள்ளவதாகும்.

மனுக்குலம் ஒரு போதும் இவ்வல்லமையை பெற்றிருப்பதாக கூற இயலாது.

இப்பொழுது இரண்டாவது வழி முறையை பார்க்கலாம்....

பார்த்து அறிதல்

இது மற்றவர்களுடைய வாழ்வில் சம்பவிப்பவைகளை பார்த்து கவனிப்பதின் மூலம் அறிவை பெற்று கொள்ளும் வழி முறையாகும்.

இவ்வகை அறிவானது நம்முடைய, குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மத்தியிலும், பள்ளியிலோ, அலுவலகத்திலோ அல்லது பிரயாணங்களிலோ பார்த்து பெற்று கொள்ளுதல் ஆகும்.

அதாவது நன்மை - தீமை அறியத்தக்க அறிவானது இயல்பாக அல்லாமல், கூர்ந்து கவனித்தல் மூலம் பெறலாம்.

மேலும், அவ்வாறு மனிதன் அறிவை அடைவதற்கு, தீமையையும் அதனுடைய பலன்களையும் கவனிக்கும்படி வேறொரு இடத்தில் தீமை அனுமதிக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் அநேக பாடங்களை கற்று கொள்ளலாம் ஆனாலும் எல்லா பாடங்களையும் அல்ல.

உங்களுக்கு தெரியுமா ?

பரலோகத்தின் தூதர்கள் இவ்வழி முறையின் மூலமே பாவம் மற்றும் தீமையின் அறிவை பெற்று கொள்ளுகிறார்கள். இதை குறித்து வாசிக்கையில்,

1 கொரிந்தியர் 4 : 9

“....நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்”

ஆம், இங்கு “வேடிக்கையானோம்” என்ற வார்த்தை காட்சி பொருள் என்பதை குறிக்கும்.

சில கவிஞர்களின் வார்த்தையில் கூட வாசிக்கிறோம், **“உலகம் ஒரு நாடக மேடை, அதில் மனிதர்கள் நடிகர்கள்”** என்று.

இது உண்மையே !

உண்மையில் உலகம், தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் ஒரு நாடக மேடையே.

கேட்டு அறிதல்

இது எழுதப்பட்ட அல்லது பேசப்பட்ட விவரங்களை அறிவதின் மூலம் காரியங்களின் அபாயத்தை உணர்ந்து கொள்ளும் வழி முறையாகும்.



இவ்வழி முறையானது தேவனால் ஏதேனில் பயன்படுத்தப்பட்டது.

ஆதியாகமம் 2 : 16,17

"....நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியையும் புசிக்கவேண்டாம்...."

இது பிரயோஜனமாய் இருந்ததா ?

இல்லை என்பதே பதில்!

ஏனெனில், ஆதாம் தீமை பற்றின அறிவை அறிவுரையாக கண்டார். ஆனால் தீமையினால் வரும் விளைவுகளை அவர் அனுபவத்தால் அறிந்திருக்கவில்லை.

எனவே, கட்டளையை மீறினால் தண்டிக்கப்படுவோம் என்று கேட்டு அறிந்தது, விலக்கப்பட்ட கனியை புசிப்பதற்கு போதுமானதாக இல்லை.

இது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தீமையினிற்று, அதை பற்றின விபரங்கள் மற்றும் தங்கள் வாழ்வில் பெற்ற அனுபவங்களை, உபத்திரவங்களை, தெரிவிப்பது மூலம் காப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

ஆனால் பிள்ளைகள் அதற்கு செவி சாய்க்கிறார்களா ?

சில சமயங்களில் செவி சாய்க்கலாம், ஆனால் பொதுவாக இல்லை என்பதே பதிலாகும்.

இப்படியாக நான்காவது மற்றும் மிகவும் பயனுள்ள வழி முறைக்கு வரலாம்.

அனுபவித்து அறிதல்

இது அனுபவத்தின் மூலம் நேரடியாக அறிவை பெற்று கொள்வது. இதனால் மற்றவர்களுக்கும் முன் உதாரணமாக இருக்கும்படி செய்வது.

ஆம், இது தனிப்பட்டவகையில் நடை முறையில் அனுபவித்து அதின் மூலம் தீமையின் அறிவை பெற்றுக் கொள்ளுதல் ஆகும்.

இவ்வழி முறையின் மூலம் தீமையின் அனுபவம் பெற்றுக்கொள்ளுதல் என்பது வேதனை நிறைந்ததும், கசப்பான அனுபவமாகவும் இருக்கும்.

ஆனாலும் நம்முடைய இருதயங்களில் ஆழமான தாக்கத்தையும் நீங்கா நினைவுகளையும் ஏற்படுத்தக்கூடியதாகும். இவ்வழி முறையானது பிற்பாடு மனுக்குலத்திற்கு மிகவும் ஆசீர்வாதமாக அமையும். இதை குறித்து வாசிக்கையில்,

எபிரெயர் 12 : 11

“எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க்காணும், அதிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.”

ஆம், இதுவே சிறப்பான வழி முறையாகும்.

இதனால் தான் மனுக்குலம் தங்களுடைய அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளும்படி கீழ் வரும் தீமைகளை அவர்கள் மேல் அனுமதித்தார். அவை

சரீரத்தில்....

நோய், அங்கவீனம், ஊனம் போன்றவை......

தனி நபர்களில்....

உணர்வுப்பூர்வமான மற்றும் மனரீதியிலான சீர்குலைவுகள்.

குடும்பங்களில்...

சுயநலத்தினால் குடும்ப உறவு முறிந்து போகுதல்.

சமுதாயத்தில்...

பெற்றோர்கள் தங்களுடைய வாழ்வில் சுயக்கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கம் கெட்டு (பாவத்தினால்) அவர்களுடைய அநீதி மற்றும் ஒழுங்கின்மை பின் நாட்களில் அவர்களுடைய குடும்பத்தை ஆட்டிப்படைப்பது போன்றவையாகும்.

மேலும், தேசங்களுக்கு இடையிலான அமைதியின்மை, இன வெறி, எல்லை மீறிய தீவிரவாதம், யுத்தங்கள் போன்றவையாகும்.

ஆம் ! இந்த தீமையினால் ஏற்படும் அழிவுகள் தான் எவ்வளவு !

இவைகள் யாவும் தீமையின் அனுமதியின் மூலம் நேரடியாகவும், மறை முகமாகவும் நிகழும் விளைவுகளாகும்.

ஓர் உதாரணத்தினால் இத்தீமையின் அனுமதியின் மூலம் தேவன் செய்வது என்ன ?

என்று புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

அக்கினி

ஆம், முதலில் அக்கினியை பற்றி பார்க்கலாம்.

இது பார்ப்பதற்கு பிரகாசமாகவும், பார்வைக்கு கவர்ச்சிகரமாகவும் இருக்கிறது. அதனால் சிறு குழந்தைகள் ஈர்க்கப்பட்டு பின் விளைவுகளை அறியாமல் நெருங்குகிறார்கள்.

இதை காணும் ஒரு அன்புள்ள அதே சமயம் ஞானமுள்ள தகப்பன் என்ன செய்வார் ?

அவர், குழந்தை நெருப்பினால் ஒரு அனுபவத்தை பெறும்படி, அவனை நெருப்புக்கு வெகு அருகாமையில் அழைத்துச் சென்று, காயம் ஆகாதபடி, அதே சமயம் அனலை உணரும் வகையில் அக்கினி அருகில் கொண்டு செல்வார்.

இதன் மூலம் நெருப்பை பற்றின, வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாத உறுதியான படிப்பினையை அக்குழந்தை பெற்று கொள்ளும் அல்லவா ?

அது போலவே பாவத்துடனும் ஆகும்.

இதுவும் அக்கினியைப் போன்றதே ஆகும். பாவம் வெளியே இருந்து பார்ப்பதற்கு கவர்ச்சியாகவும், இன்பம் தரக் கூடியதாகவும் இருக்கும்.

இவ்வாறு பாவத்தின் அனைத்து வழிகளும் விழுந்து போன மனிதனுக்கு கீழுள்ள வசனம் கூறுவது போலவே இருக்கும்.

நீதிமொழிகள் 14:12

“மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு அதன் முடிவோ மரண வழிகள்.”

ஆம், பாவ வழியெல்லாம் தற்போது இன்பம் தரக்கூடியது போல தோன்றுகிறது. உதாரணமாக **பொய் சொல்லுதல், விபச்சாரம், குடி** போன்றவை ஆகும். ஆனால் அதில் பழகும் போது அப்பழக்கமானது **“கசப்பான அனுபவத்திற்கும்”** துக்கம், வருத்தம் பின் மரணத்திற்கும் வழி நடத்துகிறது.

அதனால் ரோமர் 8 – 20, 21 வசனங்களில் தேவன் தருவதாகச் சொல்லப்பட்டுள்ள “நம்பிக்கையானது” பாவத்தின் சம்பளமாகிய மரணத்தின் அனுபவத்தின் மூலம் மனுக்குலமானது மிகப் பெரிய பாடங்களைக் கற்றுக்கொள்ளும்.

(ரோமர் 7 : 13) – “...பாவமே எனக்கு மரணமாயிற்று...”

மேலும், தேவன் “தீக்காயம்” போன்ற இந்த அனுபவமானது மனுக்குலத்தோடு நிரந்தரமாக இருப்பதில்லை என்றே கூறுகிறார்.

ஓசியா 13 : 14

“அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன், அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்.....”

ஆம், பிதாவானவர் கல்வாரி சிலுவையின் மூலமாக மரணத்திலிருந்து மனுக்குலத்திற்கான இரட்சிப்பை நிர்ணயித்திருக்கிறார்.

ஆகையால்....நிச்சயமாக மனுக்குலம் கற்றுக் கொள்ளும்.

மனுக்குலத்தின் நிலைமையைக் குறித்த தீர்க்கதரிசனத்தை வாசிக்கும் பொழுது,

ஏசாயா 13 : 12

"புருஷனைப் பசும்பொன்னிலும் மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்."

ஆம், இங்கு கூறப்பட்டுள்ள "தங்கம்" என்பது உன்னதமான குணநலன்களுக்கு அடையாளமாக உள்ளது. இதை குறித்த தீர்க்க தரிசனத்தை வாசிக்கும் பொழுது,

ஏசாயா 66 : 24

"அவர்கள் வெளியே போய் எனக்கு விரோதமாய்ப் பாதகஞ்செய்த மனுஷருடைய பிரேதங்களைப் பார்ப்பார்கள்......"

ஆம், மனுக்குலம் அனைத்தும் பாவத்தை வெறுக்கவும், நீதியை நேசிக்கவும், கற்றுக் கொண்டு பொன்னான குணநலன்களை வளர்த்துக்கொள்வார்கள்.

அப்பொழுது பிதாவின் பாதப்படியாகிய பூமியை, அதாவது, மனுக்குலத்தின் பள்ளிக்கூடத்தை குறித்தும், அதன் எதிர்காலத்தை குறித்தும் பார்க்கையில்,

ஏசாயா 60 : 13

"....என் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்."

ஆம், இங்கு **"மகிமைப்படுத்துவேன்"** என்னும் வார்த்தையானது வரப்போகிற பூமியின் பரிபூரணமும், மகிழ்ச்சியும் நிறைந்த காலத்தை குறிக்கும்.

மேலும் இதைக் குறித்து வாசிக்கையில்,

ஏசாயா 14 : 7

"பூமி முழுதும் இளைப்பாறி அமைந்திருக்கிறது. கெம்பீரமாக முழங்குகிறார்கள்".

"**முழங்குகிறார்கள்**" என்பது சமாதானம் மற்றும் மகிழ்ச்சி நிறைந்த நிலையைக் குறிக்கும். ஆனால், இன்று ஜனங்கள் மிக அறிதாகவே பாடுகிறார்கள்.

இது சமாதானம், மற்றும் மகிழ்ச்சி குறைந்துள்ள நிலைக்கான அறிகுறியாகும். மேலும் அக்காலத்தை குறித்து வாசிக்கையில்,

ஏசாயா 35 : 10

"கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள், நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும், சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள், சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்."

ஆம், நித்திய மகிழ்ச்சி என்று, நம்புவதற்கு கடினமாகவே இருக்கிறது.

இதைக் குறித்து வேறொரு வசனத்தை வாசிப்போம்,

வெளிப்படுத்தல் 21 : 4

"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார், இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது."

இங்கு கூறப்பட்டுள்ள "முந்தினவைகள்" குறிப்பது என்ன ?

ஆம் ! அவை......தீமையாகிய - நோய் - வலி - கண்ணீர் மற்றும் மரணமாகும். இவைகள் அப்பொழுது முற்றுப் பெற்றிருக்கும்! முடிவடைந்திருக்கும்!

ஆம், மரணம், துக்கம் மற்றும் கண்ணீர் யாவும் அங்கு காணப்பட மாட்டாது.

அப்பொழுது தேவனின் மாபெரும் ஞானம், அன்பு மற்றும் வல்லமை விளங்கும்.

இதைக் குறித்து வாசிக்கையில்,

யோபு 14 : 4

"அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ ? ஒருவனுமில்லை."

ஆம், தேவனால் மாத்திரமே இன்றைய தீமை நிறைந்த உலகத்தை பரிபூரணமான ஜனங்கள் நிறைந்த பரிபூரணமான உலகமாக்க முடியும்.

மனுக்குலமானது தீமை மற்றும் பாவத்தை வெறுக்க கற்றுக் கொண்ட பின்பே இது சாத்தியமாகும்.

அதனாலேயே....
தேவன் இந்த தீமையை அனுமதித்திருக்கிறார்!

இந்த தேவ திட்டத்திலும், தீமையின் அனுமதியிலும், விளங்கியுள்ள **அன்பு, நீதி, ஞானம்** மற்றும் **வல்லமை குறித்து** வருங்காலங்களில் வானத்திலும், பூமியிலும் உள்ள சர்வசிருஷ்டியும் துதித்து

சர்வவல்லமையுள்ள தேவன்....... "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவரையும்"

மற்றும் அவருடைய

மகிமையுள்ள குமாரன் கிறிஸ்து இயேசு.... "ஆட்டுக்குட்டியானவரையும்"

தொழுது கொள்வார்கள்.

உண்மையில், இதை குறித்து நாம் வாசிக்கும் போது –

வெளிப்படுத்தல் 5 :13

"அப்பொழுது வானத்திலும் (தூதர்கள்), பூமியிலும் (மனுக்குலம்), பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும் (பாதாளத்தில் மரித்த நிலைமையில் இருக்கும் மனிதர்கள், உயிர்பெற்று மீண்டும் ஜீவனை அடைபவார்கள்).....சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள்யாவும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்."

ஆம், இன்று இந்த மாபெரும் கேள்விக்கான பதிலையும், சத்தியத்தையும் அறிந்து பின்பு நம்முடைய துதியையும், ஆராதனையும் நம் தேவனுக்கே செலுத்துவோமாக.

...ஆமென்...

For Private Circulation Only

NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST E-mail: thekingdom1_6@yahoo.com